# தூத்துக்குடி மாநகராட்சி
## ஏல/ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பப் படிவம்

ஆணையருக்காக
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் தச்சர் தெருவில் கட்டப்பட்டுள்ள வணிக வளாக **கடை எண்** ________

ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நாள்:25.07.2022

| | | |
|---|---|---|
| 1 | பெயர் | |
| 2 | தகப்பனார் பெயர் | |
| 3 | இனம் | |
| 4 | வயது | |
| 5 | நிரந்தர முகவரி மற்றும் தொலைபேசி எண் | |
| 6 | ஏல/ஒப்பந்தப்புள்ளி கடை எண் விபரம் | |
| 7 | கேட்கும் முறை | |
| 8 | மாத வாடகை கோரும் தொகை (ரூபாய் எண் மற்றும் எழுத்தால்) | |
| 9 | மனுதாரர் ஏற்கனவே மாநகராட்சி கடை உரிமம் அனுபவித்து வருபவரா ? | |
| 10 | ஆம் எனில் குத்தகை விபரம் | |
| 11 | மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகை ஏதும் நிலுவை உள்ளதா ?(இனம் வாரியாக குறிப்பிடவும்) | |
| | அ) வாடகை | |
| | ஆ) குத்தகை | |
| | இ) சொத்து வரி | |
| | ஈ) குடிநீர் கட்டணம் | |
| 12 | ஆம் எனில் நிலுவைத் தொகை விபரம் ( இனம் வாரியாக குறிப்பிடவும்) | |
| 13 | மாநகராட்சிக்கு நடப்பு வரை செலுத்த வேண்டிய தொகை ஏதும் இல்லை என்பதற்கு மாநகராட்சி வருவாய் அலுவலரிடம் பெறப்பட்ட நிலுவையில்லாச் சான்று இணைக்கப்பட்டுள்ளதா ? | |
| 14 | நீதிமன்ற தண்டனை விதிக்கப்பட்டவரா ? | |

**This document can be downloaded from the http://www.tenders.tn.gov.in/**

| | | |
|---|---|---|
| 15 | காப்பு வைப்புத்தொகை செலுத்தியதற்கான வங்கி வரைவோலை எண் மற்றும் நாள் | |
| 16 | விண்ணப்பம் பெறுவதற்கான கட்டணம் மாநகராட்சியில் செலுத்திய செல்லான் எண் மற்றும் நாள் | |

**<u>சான்று</u>**

மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மையானது எனவும் இணைப்பில் கண்ட ஏல அறிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பார்த்து படித்து கேட்டு தெரிந்துக்கொண்டேன்.

**மனுதாரரின் கையொப்பம்**

**<u>குறிப்பு</u>**

1) காப்பு வைப்புத்தொகை வங்கி வரைவோலையாக மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2) ஒப்பந்தப்புள்ளி கோருபவர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தில் குறிப்பிட்டுள்ள இடத்தில் புகைப்படத்தினை ஒட்டி படிவத்துடன் கொடுத்த நிபந்தனைகளின்படி கையொப்பமிட்டு வருவாய் அலுவலரின் நிலுவையில்லா சான்று மற்றும் நீதிமன்ற தண்டனை விதிக்கப்படவில்லை என்பதற்கான காவல் துறையினரின் சான்று ஆகியவற்றை இணைத்து உறையில் வைத்து மூடி முத்திரையிட்டு மாநகராட்சி அலுவலகத்தில் வைக்கப்படும் ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் 25.07.2022 அன்று மதியம் 03.00 மணிக்குள் சேர்க்க வேண்டும். அன்றைய தினமே மாலை 3.30 மணிக்கு வருகை தந்திருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும்.

3) ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தில் குறிப்பிட்டுள்ள இடத்தில் புகைப்படத்தினை ஒட்டி படிவத்துடன் கொடுத்த நிபந்தனைகளின்படி கையொப்பமிட்டு வருவாய் அலுவலரின் நிலுவையில்லா சான்று மற்றும் நீதிமன்ற தண்டனை விதிக்கப்படவில்லை என்பதற்கான காவல் துறையினரின் சான்று ஆகியவற்றை இணைத்து 25.07.2022 அன்று மதியம் 3.00 மணிக்குள் படிவம் பூர்த்தி செய்து ஏலம் நடத்தும் அலுவலரிடம் ஒப்படைத்த பின்பு ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

4) வருவாய் அலுவலரின் நிலுவையில்லா சான்று மற்றும் நீதிமன்ற தண்டனை விதிக்கப்படவில்லை என்பதற்கான காவல் துறையினரின் சான்று ஆகியவை இணைக்கப்படாத விண்ணப்ப படிவம் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

5) ஒப்பந்தப்புள்ளி படிவம் வழங்கும் மனுதாரர் கலம் 8ல் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை பூர்த்தி செய்வதுடன், கலம் 15ல் வங்கி வரைவோலை விபரங்களையும் குறிப்பிட்டு வங்கி வரைவோலையாக ஒப்பந்தப்புள்ளி படிவத்துடன் இணைத்து வழங்கும் பட்சத்தில் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கப்படுவார்.

6) ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருபவர் புகைப்படத்துடன் கூடிய முகவரிக்கான அடையாள அட்டை நகல் இணைக்க வேண்டும்.

7) கோரப்படும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை உறுதி செய்யப்படும் நிலையில் மேற்படி தொகை அதற்குரிய சரக்கு சேவை வரி (GST) சேர்த்து செலுத்தப்பட வேண்டும்.

8) உரிமம் காலம் முடிவுற்ற (மூன்றாண்டு தொகுப்பு) பின்னர் அடுத்த மூன்றாண்டு தொகுப்பிற்கு முந்தைய காலத்தின் வாடகை தொகையில் 15% உயர்வு செய்து வசூலிக்கப்படுவதுடன் மேற்படி தொகைக்குரிய சரக்கு சேவை வரி (GST) செலுத்தப்பட வேண்டும்.

**This document can be downloaded from the http://www.tenders.tn.gov.in/**

# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>

## <u>பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு தொடர்பான பொது நிபந்தனைகள்:</u>

1. மாமன்றம் அல்லது ஒப்பந்தக்குழு கருதினால் முன் அறிவிப்பு கொடுத்து உரிமம் காலம் முடிவடைவதற்குள் இடைப்பட்ட காலத்தில் எந்த நிலையிலும் உரிமத்தை நிறுத்தி விடவோ அல்லது ரத்து செய்யவோ ஆணையருக்கு அதிகாரமுண்டு. அவ்வாறு ரத்து செய்யும் போது உரிமம் பெற்றவர் யாதொரு நஷ்ட ஈடும் கேட்க உரிமையில்லை.

2. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். (நிலை) 92 நாள். 03.07.2007 ன்படி மூன்று ஆண்டு தொகுப்பில் மாத வாடகை அடிப்படையில் உரிமம் ஒப்படைக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை 15% வாடகை உயர்வுடன் ரூ.1000/– செலுத்தி உரிமம் புதுப்பிக்கப்பட வேண்டும். மேலும் தொடர்ச்சியாக மூன்றாண்டு தொகுப்பான 9 ஆண்டுகள் முடிவு பெற்றவுடன் உள்ளூர் சந்தை மதிப்பின் அடிப்படையில் வாடகை மறு நிர்ணயம் செய்யப்படும்.

3. மின் பழுது மற்றும் கட்டிட பராமரிப்பு பணி மேற்கொள்ள இருப்பின் தன்னிச்சையாக செயல்படகூடாது. மாநகராட்சி நிர்வாகத்திடம் ஒப்புதல் பெற்ற பின்னரே பணி மேற்கொள்ள வேண்டும். மேலும் உரிமம் பெற்ற கடையை உள்வாடகைக்கு கண்டிப்பாக அனுமதிக்கக்கூடாது.

4. அவ்வப்போது அரசால் பிறப்பிக்கப்படும் அரசாணை, நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளுக்கு கட்டுப்பட வேண்டும். உரிமம் வழங்கப்பட்ட கடைகள் மாநகராட்சி வளர்ச்சி பணிக்கு தேவைப்படின் எவ்வித மறுப்பும் தெரிவிக்காமல் மாநகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும்.

5. மாநகராட்சி கடைகளின் வாடகை பிரதி மாதமும் 5ஆம் தேதிக்குள் செலுத்திட வேண்டும் தொடர்ந்து வாடகை செலுத்த தவறினால் அலுவலக மூலம் நடவடிக்கை மேற்கொண்டு உரிமையாணை பெற்றவருக்கு யாதொரு அறிவிப்பு கொடுக்காமல் எவ்வித காரணம் காட்டாமல் அவரது உரிமம் ரத்து செய்யவோ அல்லது நிறுத்தி வைக்கவோ மாமன்றம் மற்றும் ஒப்பந்தக் குழுவிற்கு அதிகாரம் உண்டு.

6. வங்கி கூட்டுறவுத்துறை மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் காவல்துறை மூலம் நீதிமன்றங்களில் எவ்வித குற்றவியல் தொடர்பாக வழக்குகளும் நிலுவையில் இல்லை என்பதற்கான சான்று சமர்ப்பிக்க வேண்டும்.

This document can be downloaded from the http://www.tenders.tn.gov.in/

7. உரிமம் வழங்கப்பட்ட கடைகளின் அளவு மட்டுமே பயன்படுத்த வேண்டும். ஆக்கிரமிப்பு ஏற்படுத்த கூடாது.

8. சொத்துவரி/தண்ணீர் கட்டணம்/ மாநகராட்சி தொடர்பான இதர வரிகள் தங்கள் பெயரில் செலுத்தப்பட்டு வருமாயின் அதற்குரிய விவரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

9. ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவம் இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்பவர்கள் ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி என்ற பெயரில் ரூ.525/—க்கான வங்கி வரைவோலையை சேர்த்து ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.

10. உரிமையாணை பெற்றவர்கள் மின்கட்டணம், குடிநீர் கட்டணம் மற்றும் வரிகள் போன்றவற்றை உரிம காலத்தில் உரிமம்தாரர் அவரது சொந்த பொறுப்பில் செலுத்த வேண்டும். இது தவிர இந்த அறிவிப்பில் குறித்துள்ள எல்லா நடவடிக்கைகளுக்கும் மற்றும் பொது நிபந்தனைகளுக்கும் உரிமம்தாரர் கட்டுப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் உரிமம் ரத்து செய்யப்பட்டு மறு ஏலம் கோரப்படும்.

11. மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டு ரூ.100/— மதிப்புள்ள ஒப்பந்த பத்திரத்தினை நோட்டரி பப்ளிக் மூலம் கையெழுத்திட்டு வழங்கிட வேண்டும்.

மேற்படி நிபந்தனைளை படித்து/வாசித்து கேட்டு முழுமையாக தெரிந்து கொண்டேன்.

This document can be downloaded from the http://www.tenders.tn.gov.in/